No. of Printed Pages : **11**

**9170**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III
# அரசியல் அறிவியல் / POLITICAL SCIENCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. ‘பாலிடிக்ஸ்’ என்ற வார்த்தை ‘‘பொலிஸ்’’ (Polis) என்ற கிரேக்க சொல்லிலிருந்து வந்தது. இந்த ‘‘பொலிஸ்’’ என்ற சொல்லின் பொருள் :

(அ) அரசியல் (ஆ) நகர அரசு

(இ) காவல் அரசு (ஈ) காவல் படைகள்

The term ‘Politics’ is closely related to the Greek word ‘Polis’ meaning :

(a) Politics (b) City-State

(c) Police State (d) Police Forces

2. ‘லெவியதான்’ என்ற நூலை எழுதியவர் யார் ?

(அ) ரூசோ (ஆ) ஹாப்ஸ் (இ) மார்கந்தோ (ஈ) லாக்

Who authored the book ‘Leviathan’ ?

(a) Rousseau (b) Hobbes (c) Morgenthau (d) Locke

3. ஒருமைவாத இறையாண்மை கோட்பாட்டை எடுத்துரைத்தவர் :

(அ) மரியம் (ஆ) ஆஸ்டின் (இ) வில்லோபை (ஈ) ஹெகல்

Monistic theory of sovereignty was propounded by :

(a) Merriam (b) Austin (c) Willoughby (d) Hegel

4. உரிமைகளை பாதுகாத்து ஆதரிப்பதற்கான பன்னாட்டு மற்றும் தேசிய சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவை :

(அ) இயற்கை உரிமைகள் (ஆ) அடிப்படை உரிமைகள்

(இ) மனித உரிமைகள் (ஈ) உரிமைகள் மசோதா

The rights that are protected and supported by international and national laws and treaties are :

(a) Natural Rights (b) Fundamental Rights

(c) Human Rights (d) The Bill of Rights

5. மக்களாட்சி என்ற சொல்லின் பொருள் :

(அ) மக்களின் அதிகாரம் (ஆ) மக்களின் ஆட்சி

(இ) குழுவாட்சி (ஈ) புரட்சி

The term democracy means :

(a) Power of People (b) Rule by People

(c) Polyarchy (d) Revolution

6. கீழ்கண்ட இயல்புகளில் இந்திய நாடாளுமன்ற முறை அரசாங்கம் செயல்பட அடிப்படையானவை யாவை ?

(அ) கீழவைக்குப் பொறுப்பான செயலாட்சி.

(ஆ) உண்மையான செயலாட்சியாக பிரதமர் இருத்தல்.

(இ) பெயரளவிலான மற்றும் உண்மையான செயலாட்சி.

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

Which of the following are the features on the basis of which the Parliamentary system of Government in India operates ?

(a) Executive responsible to Lower House

(b) Prime Minister is the real executive

(c) Nominal and Real executives

(d) All of the above

7. அரசியல் அறிவியலின் தந்தை யார் ?

(அ) அரிஸ்டாட்டில் (ஆ) சாக்ரடீஸ்

(இ) செனோபோன் (ஈ) பிளாட்டோ

Who is called the Father of Political Science ?

(a) Aristotle (b) Socrates

(c) Xenophon (d) Plato

**8.** ஃபேபியன் சமதர்மவாதம் எவருடைய பெயரால் உருவாக்கப்பட்டது ?

(அ) ஆங்கிலேய ஜெனரல் (ஆ) ரோமானிய ஜெனரல்

(இ) இந்தியன் ஜெனரல் (ஈ) ரஷ்யன் ஜெனரல்

Fabian Socialism was named after :

(a) English General (b) Roman General

(c) Indian General (d) Russian General

**9.** கீழ்க்கண்டவற்றில் அதிகாரமில்லாக் கொள்கையை ஆதரித்தவர் யார் ?

(அ) ஆதம் ஸ்மித் (ஆ) காரல் மார்க்ஸ்

(இ) ஜான் லாக் (ஈ) ஜோசப் பிரௌதான்

Among the following who believed in Anarchism ?

(a) Adam Smith (b) Karl Marx

(c) John Locke (d) Joseph Proudhon

**10.** கீழ்க்கண்டவற்றில் ஒரு கட்சி முறையைக் கொண்ட நாடு எது ?

(அ) வட கொரியா (ஆ) கியூபா

(இ) சீனா (ஈ) மேற்கண்ட அனைத்தும்

Which of these countries have uni-party system ?

(a) North Korea (b) Cuba

(c) China (d) All of the above

**11.** 'வாக்குரிமை' என்னும் சொல் __________ ஆகியவற்றிலிருந்து தோன்றியதாகும்.

(அ) ஆங்கிலோ-ஜெர்மன் (ஆ) ஆங்கிலோ-பிரெஞ்சு

(இ) ஆங்கிலோ-இத்தாலியன் (ஈ) ஆங்கிலோ-இந்தியன்

The word 'Franchise' is of __________ origin.

(a) Anglo-German (b) Anglo-French

(c) Anglo-Italian (d) Anglo-Indian

**12.** உள்ளாட்சி அமைப்பின் தந்தை என கருதப்படுபவர் யார் ?

(அ) வாரன் ஹேஸ்டிங் (ஆ) மேயோ பிரபு

(இ) ரிப்பன் பிரபு (ஈ) ராபர்ட் கிளைவ்

Who is considered as the Father of Local Self Government in India ?

(a) Warren Hastings (b) Lord Mayo

(c) Lord Rippon (d) Robert Clive

**13.** 'வைக்கம் வீரர்' என அழைக்கப்படும் தலைவர் யார் ?

(அ) வரதராஜுலு (ஆ) கு. காமராஜ்

(இ) ஈ.வெ.ரா. பெரியார் (ஈ) ராஜாஜி

The leader who was called "Vaikom Hero" :

(a) Varadarajulu (b) K. Kamaraj

(c) E.V.R. Periyar (d) Rajaji

**14.** 1923 -ம் ஆண்டு, முதல் இந்திய 'மே தினம்' கூட்டத்தை சென்னையில் நடத்தியவர்.

(அ) ம. சிங்காரவேலர் (ஆ) பாரதியார்

(இ) மறைமலை அடிகள் (ஈ) ஈ.வெ.ரா. பெரியார்

In 1923, First Indian 'May Day' meeting was arranged in Chennai by :

(a) M. Singaravelar (b) Bharathiyar

(c) Maraimalai Adigal (d) E.V.R. Periyar

**15.** இந்தியாவின் அரசமைப்பில் மக்கள் நல அரசு பற்றிய சிந்தனையை உள்ளடக்கிய பகுதி.

(அ) பகுதி - I (ஆ) பகுதி - IV (இ) பகுதி - II (ஈ) பகுதி - III

The idea of Welfare State in the Indian Constitution is contained in :

(a) Part - I (b) Part - IV (c) Part - II (d) Part - III

**16.** 'அரசியல் பொருளாதாரத்தின் கொள்கைகள்' என்ற படைப்பின் ஆசிரியர் யார் ?

(அ) ஜான் ஸ்டூவர்ட் மில் (ஆ) புனித தாமஸ் அக்வினாஸ்

(இ) பிளாட்டோ (ஈ) தாமஸ் ஹாப்ஸ்

Who is the author of the work "Principles of Political Economy" ?

(a) John Stuart Mill (b) St. Thomas Aquinas

(c) Plato (d) Thomas Hobbes

17. இந்தியாவில் முதலாவது பொதுத்தேர்தல்கள் _________ ஆம் ஆண்டு நடைபெற்றது.

(அ) 1952-1953 (ஆ) 1950-1951

(இ) 1947-1948 (ஈ) 1951-1952

First General elections in India took place in the year _________.

(a) 1952-53 (b) 1950-51

(c) 1947-48 (d) 1951-52

18. மார்க்சிய கோட்பாடானது மக்களாட்சியை _________ சமூக சூழலில் காண்கிறது.

(அ) சமூக குழு (ஆ) சமூக

(இ) முதலாளித்துவ வர்க்க (ஈ) வர்க்க பகுப்பாய்வு

The Marxist theory views the democracy in the social context of _________.

(a) Social group (b) Community

(c) Capitalist class (d) Class analysis

19. 'மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சியாகும்' என்று கூறியவர் :

(அ) அரிஸ்டாட்டில் (ஆ) சாக்ரடீஸ்

(இ) ஆப்ரகாம் லிங்கன் (ஈ) பிளாட்டோ

Who said, 'Democracy is for the people, of the people and by the people' ?

(a) Aristotle (b) Socrates

(c) Abraham Lincoln (d) Plato

20. தேர்தல்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் மற்றும் முடிவுகளை கற்றறியும் கல்வி என்பது :

(அ) குடியுரிமை (ஆ) வாக்குரிமை

(இ) மக்களாட்சி (ஈ) தேர்தலியல்

The study of results and other statistics relating to election is called :

(a) Citizenship (b) Franchise

(c) Democracy (d) Psephology

## பகுதி - II / PART - II

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு** **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

**21.** பின் தோன்றிய நடத்தையியலின் அடிப்படைக் கருத்தாக்கத்தினை எழுதுக.

Write the basic concept of Post-Behaviouralism.

**22.** அரசியல் அறிவியல் பாடத்தின் நோக்கங்கள் யாவை ?

What is the objective of Political Science as a discipline ?

**23.** பாகுபாடு பற்றி குறிப்பு எழுதுக.

Write a note on Discrimination.

**24.** இயற்கைக் குடியுரிமை என்றால் என்ன ?

What is Natural Citizenship ?

**25.** ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தின் நிறைகளைப் பற்றி எழுதுக.

Write about the merits of Unitary form of Government.

**26.** கொள்கை அரசுக் கருவிகள் என்பதை விளக்குக.

Explain the Ideological State Apparatus.

**27.** பல கட்சி முறை பற்றி சிறு குறிப்பு எழுதுக.

Write a short note on Multi-party system.

**28.** கிராம சபை கூட்டம் வருடத்திற்கு எந்தெந்த நாட்களில் கூடுகிறது ?

What are the days that Gram Sabha meets in a year ?

[ திருப்புக / Turn over

**29.** ‘விசாகா வழிமுறைகள்’ என்றால் என்ன ?

What is meant by ‘Vishakha Guidelines’ ?

**30.** நோட்டா என்றால் என்ன ?

What is NOTA ?

## பகுதி - III / PART - III

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory.**

**31.** அரிஸ்டாட்டிலுக்கும், பிளாட்டோவுக்கும் உள்ள தொடர்பினைக் கூறுக.

Write the relationship between Aristotle and Plato.

**32.** அரசு உருவாவதற்கு பங்களிக்கும் காரணிகள் ஏதேனும் இரண்டினை விளக்குக.

Explain any two factors that contribute to make a State.

**33.** இந்தியாவில் குடியுரிமை பெறக்கூடிய பல்வேறு வழிமுறைகள் யாவை ?

What are the different ways where Citizenship can be acquired in India ?

**34.** பரேட்டோவின் உயர்ந்தோர்குழாம் கோட்பாட்டில் உயர்ந்தோர் குழுவின் தகுதிகளாக கூறப்பட்டவற்றை குறிப்பிடுக.

Mention the qualities of elites in Pareto's Theory of Elites.

**35.** அரிஸ்டாட்டில் அரசினை எவ்வாறு வகைப்படுத்துகிறார் ?

How does Aristotle classify the State ?

**36.** நேர்மறைத் தாராளவாதத்தில் அரசின் பணிகளை விளக்குக.

Explain the functions of the State in Positive Liberalism.

**37.** கட்சி முறையின் வகைகளை பற்றி எழுதுக.

List out the types of Party System.

**38.** வெளிப்படையான வாக்கு மற்றும் ரகசிய வாக்கினை விளக்குக.

Explain about open ballot and secret ballot.

**39.** திருவள்ளுவரின் நல அரசு மற்றும் அரசன் பற்றிய கருத்து என்ன ?

What is Thiruvalluvar's ideas on Welfare State and King ?

**40.** 'அப்பிக்கோ இயக்கம்' பற்றி எழுதுக.

Write about 'Appiko Movement'.

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**Note :** Answer **all** the questions. **7x5=35**

**41.** (அ) அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக அறிவியல் பாடங்களுக்கும் உள்ள உறவு முறைகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பெரியாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் பங்களிப்பை விவரிக்கவும்.

(a) Describe the relationship between Political Science and other Social Science.

**OR**

(b) Explain the life history and contribution of Periyar.

**42.** (அ) நவீன அரசின் பணிகள் பற்றி விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பெண்ணியத்தின் பல்வேறு வகைகளை விவாதிக்கவும்.

(a) Describe the functions of Modern State.

**OR**

(b) Discuss the various Schools of Feminism.

[ திருப்புக / Turn over

**43.** (அ) இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை வெளிக்கொணர்க.

**அல்லது**

(ஆ) மாநகராட்சி மேயரின் அதிகாரம் மற்றும் பணியினை விளக்குக.

(a) Bring out the powers and functions of Election Commission of India.

**OR**

(b) Explain the functions and powers of the Mayor of a Municipal Corporation.

**44.** (அ) சட்டத்தின் வகைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) இந்தியாவின் முக்கிய சுற்றுச்சூழல் இயக்கங்களை விவரிக்கவும்.

(a) Explain the different kinds of Laws.

**OR**

(b) Describe the major Environmental Movements of India.

**45.** (அ) அரசியல் தளத்தில் இந்திய மக்களாட்சியின் சாதனைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

**அல்லது**

(ஆ) நாடாளுமன்ற முறை அரசாங்கத்திற்கும், குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் பற்றி எழுதுக.

(a) Write an essay on achievements of Indian democracy in the political front.

**OR**

(b) Differentiate between Parliamentary form of Government and Presidential form of Government.

**46.** (அ) இந்திய தேசியவாதம் தோற்றத்திற்கான காரணிகளை பட்டியலிடுக.

**அல்லது**

(ஆ) அரசியல் அறிவியல் என்பது கலையா அல்லது அறிவியலா என்பதை நிறுவுக.

(a) Enumerate the causative factors of Indian Nationalism.

**OR**

(b) Is Political Science an Art or Science ? Substantiate your answer.

**47.** (அ) சமத்துவத்தின் வகைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) காரல் மார்க்சின் படைப்புகள் பற்றி எழுதுக.

(a) Explain the types of Equality.

**OR**

(b) Write about the works of Karl Marx.

**- o O o -**